# மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் நாமக்கல்

# மாணவராற்றுப்படை வீடியோக்கள் மூலம் நன்னெறிக்கல்வி- ஆசிரியர் பயிற்சி

நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமானது, மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் நெறிமுறைச் சார்ந்த மதிப்புகளை உயர்த்துவதற்காக 'மாணவராற்றுப்படை ' என்ற பெருந்தலைப்பில் 13 வீடியோக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் மு. செல்வம் மாணவராற்றுப்படை வீடியோக்களை வெளியிட்டு பேசுகையில் ஒரு செய்தி , ஒரு செயல், ஒரு காட்சி , ஒருவருடைய எண்ணத்தையும், நடத்தைகளையும் மாற்றிவிடும் என்றும், மாணவராற்றுப்படை வீடியோக்கள் ஒழுக்கம் மற்றும் நெறிமுறைச் சார்ந்த விழுமியங்களை மாணவர்கள் தெரிந்து கொண்டு , அவற்றை தங்களுக்குள் வளர்த்துக் கொள்ள பெரியளவில் உதவும் எனக் கூறினார்.

இந்நிறுவன விரிவுரையாளர் கோ. வேதராஜபால்சன் மாணவராற்றுப்படை வீடியோக்களைத் தயாரித்துள்ளார். மாணவராற்றுப்படை வீடியோக்களில் இந்நிறுவன முதல்வர், விரிவுரையாளர்கள், நாமக்கல் மாவட்ட மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள், நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் ஒழுக்கம் மற்றும் நெறிமுறைச் சார்ந்த மதிப்புகளை மாணவர்களிடத்தில் கொண்டு செல்லும் வண்ணம் வெற்றிக் கதைகள், வாழ்வியல் நிகழ்வுகள் போன்றவற்றைத் தொகுத்து வழங்கியுள்ளனர்.

மாணவர்களிடையே ஒழுக்கம் மற்றும் நெறிமுறைச் சார்ந்த மதிப்புகளை எவ்விதம் மாணவராற்றுப்படை வீடியோக்கள் கொண்டு செல்கின்றன என்பதைக் குறித்த மாவட்ட அளவிலான விழுமியக் கல்வி ஆராய்ச்சியை இந்நிறுவன விரிவுரையாளர் கோ. வேதராஜபால்சன் செய்து வருகிறார்.

19.6.2025 அன்று இந்நிறுவனத்தில் நாமக்கல் மாவட்ட நடுநிலைப்பள்ளி ஆசிரியர்கள் 30 பேருக்கு மாணவராற்றுப்படை வீடியோக்களை மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் நெறிமுறைச் சார்ந்த விழுமியங்களைக் கற்க பயன்படுத்தும் முறைகள் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது. மேற்கொண்டு 30 பள்ளிகளில் மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் நெறிமுறைச் சார்ந்த மதிப்புக் கல்வியை மாணவர்கள் இந்த வீடியோக்களின் உதவியால் கற்றுக் கொண்டுப் பயன்படுத்துதுவது குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும்.

வீடியோக்கள் மூலம் நன்னெறிக் கல்விப் பயிற்சியை வளையப்பட்டி, அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் மற்றும் கருத்தாளருமான ந. மகேஷ்குமார் தொடங்கி வைத்தார். இந்நிறுவன துணை முதல்வர் மா. சந்தோஷம் வாழ்த்துரை கூறினார். இந்நிறுவன விரிவுரையாளர் ஏ. சிவபெருமான் நன்றியுரை கூறினார்.

மாணவராற்றுப்படை வீடியோக்களை அனைத்துப் பள்ளி ஆசிரியர்களும், மாணவர்களும் பயன்படுத்தும் வகையில் இந்நிறுவன DIET Namakkal யூடியூப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

.